# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

# 4



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து


அப்பொழுது மணவாட்டியை - தெரிந்து
கொள்ளப்பட்ட ஸ்திரீயை - இழுத்துக்
கொள்ள ஒரு செய்தி புறப்பட்டு
சென்று வேகமாய் பரவும்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

# செய்தி: 65-11-25 கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு

---

*40. கவனியுங்கள், கேளுங்கள், இந்த தன்மையைக் கவனியுங்கள்.*

*ஸ்திரீகள் பதட்டமாக தங்கள் விருப்பப்படி என்ன வேண்டுமானாலும் செய்வதை நீங்கள் காணும்போது, சபையும் அதையே செய்வதை நீங்கள் காணலாம்.*

**ஆனால் ஆவிக்குரிய மணவாட்டியை நீங்கள் கவனியுங்கள்.**

அவளுக்கு எழுப்புதல் உண்டாகத் தொடங்கி, அவள் திரும்பி வந்து தேவனுடைய வார்த்தையுடன் தன்னை வரிசைப்படுத்திக் கொள்ளும்போது, அந்த சமயத்தில் வேதவசனங்கள் எவ்வாறு வெளிப்படுகிறதென்பதைப் பாருங்கள்.

அப்பொழுது மணவாட்டியை - தெரிந்து கொள்ளப்பட்ட ஸ்திரீயை - இழுத்துக் கொள்ள ஒரு செய்தி புறப்பட்டு சென்று வேகமாய் பரவும்.


இங்குள்ள இந்த பின்புறக்காட்சி
அனைத்தும் ஒரு குறுகிய, வேகமான
செய்திக்கு அடிக்கல்லை நாட்டுவதாக
அமைந்திருக்கும்.
அந்த செய்தி முழு தேசத்தையுமே
குலுக்கும்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: இதை அறியாமலிருக்கிறாய், ஆகஸ்டு 15, 1965

---

*79. நான் கட்டிடம் கட்ட மாத்திரம் செய்கிறேன்.*

**ஏதோ ஒன்று நடப்பதை நீங்கள் காணப்போகும் நேரம் மிக அருகாமை யிலுள்ளது.**

**ஏதோ ஒன்று நடக்கப் போகின்றது.**

**இங்குள்ள இந்த பின்புறக்காட்சி அனைத்தும் ஒரு குறுகிய, வேகமான செய்திக்கு அடிக்கல்லை நாட்டுவ தாக அமைந்திருக்கும்.**

**அந்த செய்தி முழு தேசத்தையுமே குலுக்கும்.**

---

**அந்த சிறிய மீதமுள்ளவர்கள், அவர்களுக்கு விசுவாசம் இருக்கிறது - புறஜாதிகளின் கதவுகள் அடைக்கப்பட்ட பிறகு, தேவன் அப்பொழுது ஒரு சபையை அபிஷேகம் பண்ணுவார்**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: கேள்விகளும் பதில்களும், ஜனவரி 3, 1954

*203. ஓ, சகோதரனே, பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிற ஒரு சபையை எனக்குத் தாருங்கள்,* **வேத சாஸ்திரம் படித்தவர்கள் உரைக்கப்பட்ட வார்த்தை இரண்டாயிரம் ஆண்டுகளாக செய்யத் தவறினதை தேவன் ஒரு வருடத்தில் செய்வார்.**

**சபையின் அபிஷேகமானது வரும் வரை காத்திருங்கள்.**

**அந்த சிறிய மீதமுள்ளவர்கள், அவர்களுக்கு விசுவாசம் இருக்கிறது - புறஜாதிகளின் கதவுகள் அடைக்கப்பட்ட**

**பிறகு, தேவன் அப்பொழுது ஒரு சபையை அபிஷேகம் பண்ணுவார்.**

**"அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியாயிருக்கிறவன் இன்னும் நீதியாக இருக்கட்டும். பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாயிருக்கட்டும்" தேவன் சபையை தேவனுடைய வல்லமையால் அபிஷேகம் பண்ணுவார், காரியங்கள் அப்பொழுது சம்பவிக்கும்.**

*அப்பொழுது மாத்திரமல்ல, இப்பொழுதும் அவர் அதைச் செய்கின்றார்.*

---

# அவர்கள் என்ன சொன்னாலும் அது நிறைவேறும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0321 — நான்காம் முத்திரை

*178 "என்னுடைய எண்ணெயையும், திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே", பாருங்கள்?*

*உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.*

*காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்.*

*சிறைபடுத்திக் கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப் போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தி*

*னாலே கொல்லப்பட வேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்.*

*179* இப்பொழுது, அவன் தன்னுடைய பெரிய பட்டயத்தைக் கையிலேந்தியவனாய், கொல்லப் புறப்பட்டான் என்று சென்ற இரவு நாம் பார்த்தோம்.

*180* ஆனால் அவன் பட்டயத்தினாலே மடிந்து போவான் - தேவனுடைய வார்த்தை என்னும் பட்டயம், இருபுறமும் கருக்குள்ள அந்த பட்டயம் அவனைக் கொன்றுபோடும் என்று நாம் அறிந்து கொண்டோம்.

## ஏழு இடி முழக்கங்கள் அந்த சிறு குழுவுக்கு தங்கள் சத்தங்களை

**முழங்கும் வரைக் காத்திருங்கள். அப்பொழுது அவர்கள் தேவனுடைய வார்த்தையை வல்லமையாய் பிரயோகிக்க முடியும்.**

**அந்த வார்த்தை துண்டு துண்டாக வெட்டும்.**

**வானத்தை அடைக்கவும், அவர்கள் *இதையோ* அல்லது *அதையோ* நிறுத்தவும், அவர்கள் விரும்பினதைச் செய்யவும் அவர்களுக்கு அதிகாரமுண்டாகும். மகிமை !**

தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தை அவனைக் கொன்று போடும், இருபுறமும் கருக்கான எந்த

பட்டயத்திலும் அது கருக்கானதாயிருக்கிறது.

**அவர்கள் விரும்பினால் லட்சக் கணக்கான டன்கள் எடையுள்ள வண்டுகளை வரவழைக்க முடியும். ஆமென் !**

**அவர்கள் என்ன சொன்னாலும் அது நிறைவேறும். ஏனெனில் அது தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. ஆம். ஆமென்.**

தேவன், எப்பொழுதுமே அது அவருடைய வார்த்தையாய் இருக்கிறது. ஆனால் அவர் அது கிரியை செய்யத் தக்கதாக எப்பொழுது அவர் மனிதனை உபயோகிக்கின்றனர்.

178 "Touch not My Oil and wine!" See?

*And all that dwell upon the earth shall worship him, whose names* were *not written in the book of life of the Lamb slain from the foundation of the world.*

*If any man* has *an ear, let him hear.*

*He that leadeth into captivity shall go into captivity: he that killeth with the sword must be killed with the sword. Here is the patience and…faith of the saints.*

179 Now, we had him coming, last night, with his great sword, to kill.

180 We find out that he gets killed with the sword, too, the sword of the Word. God's Word, sharp, two-edged sword, slays him, puts him right down. **Wait till them Seven Thunders utter Their voices to that group who really can take the Word of God and hand It there, It'll slice and cut. And they can close the heavens. They can shut *this*, or do *that*, whatever they want to. Glory!** He'll be slayed by the Word that proceeds from His mouth, is sharper than a two-edged sword. **They could call for a hundred billion tons of flies if they wanted to. Amen. Whatever they say, is going to happen, because It's the Word of God**

**coming from the mouth of God. Yeah. Amen.** God, always, It's His Word, but He always uses man to work It.

63-0321 — The Fourth Seal
Rev. William Marrion Branham




என் நண்பர்களே,
அமைதியாயிருந்து,
முன்னேறிச் சென்று
கொண்டிருங்கள். ஏனெனில்
ஏதோ ஒன்று நடக்கப்போகும்
அந்த மணி நேரம் வேகமாக
நெருங்கிக் கொண்டிருக்கிறது
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-12-29 பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள்

எனவே, இப்பொழுது, நான் இது வரை கூறாத ஒன்றை உங்களிடம் கூறப் போகிறேன்.

இவ்வளவு காலமாக, இத்தனை ஆண்டுகளாக இதையே நாம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம் - நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளாக, அல்லது அதற்கும் அதிகமாக.

மூன்றாம் இழுப்பு இப்பொழுது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது, அது என்னவென்று உங்கள் எல்லோருக்கும் தெரியுமென்று நான் உறுதி கொண்டிருக் கிறேன்.

*10. இப்பொழுது ஞாபகம் கொள் ளுங்கள், அதை யாருமே பாவனை செய்யமாட்டார்கள், அது பாவனை செய்யப்பட முடியாது.*

*அது இப்பொழுது இருந்து வருகிறது, இதைக் குறித்து நான் எச்சரிக்கப் பட்டுள்ளேன்.... வெகு விரைவில் - இந்த நேரத்தில் தானே, இப்பொழுது தான் அது நிகழ்ந்தது.*

*எனவே உங்கள் மத்தியில் அதன் பிரசன்னத்தை அது அடையாளம் காண் பிக்க முடியும். பாருங்கள்?* **ஆனால் உலக சபைகள் ஆலோசனை சங்கம் நெருக்கத்தைக் கொண்டு வரும் வரைக்கும், அது பெரிதான வழியில் உபயோகப்படுத்தப்படாது.**

*அது அப்படி செய்யும் போது... பெந்தெகொஸ்தேயினர் போன்றவர்கள் எதை வேண்டுமானாலும் ஏறக்குறைய பாவனை செய்ய முடியும்.*

**ஆனால் அந்த நேரம் வரும்போது (அந்த இறுக்கம் வரும் போது), நீங்கள் தற்காலிகமாக கண்டு வந்தது அதன் முழு வல்லமையுடனும் வெளிப்படுவதைக் காண்பீர்கள்.**

*எனக்கு முதலில் கட்டளை கொடுக்கப்பட்ட பிரகாரம், நான் சுவிசேஷ ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டும், நான் தொடர்ந்து செய்ய வேண்டும்.*

*உங்களுக்கு வார்த்தை அளிக்கப்பட்டு விட்டது.*

*நீங்கள் எதை எதிர்நோக்கியிருக்க வேண்டுமென்றும், எப்படி நிற்க வேண்டு மென்றும் உங்களுக்குத் தெரியும்.*

*நான் சுவிசேஷ ஊழியத்தில் தொடர்ந்து இருக்கவேண்டும்.*

**என் நண்பர்களே, அமைதியா யிருந்து, முன்னேறிச் சென்று கொண் டிருங்கள். ஏனெனில் ஏதோ ஒன்று நடக்கப்போகும் அந்த மணி நேரம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக் கிறது.**

*11. சில சிறு விநோதமான காரியங்கள் நடப்பதை நீங்கள் ஒருக்கால் காணலாம் - பாவமான எதுவும் அல்ல. அந்த அர்த்தத்தில் நான் கூறவில்லை - வழக்கமான போக்குக்கு விநோதமான ஒன்று என்னும் அர்த்தத்தில் கூறுகிறேன்.*

*ஏனெனில் இந்த ஊழித்தில் நான் அடைந்துள்ள நிலையில், நான் பின்னடைந்து, அந்த இடத்தை கவனித்து, அதை உபயோகிப்பதற்கான நேரத்துக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அது உபயோகிக்கப்படும்! அது எல்லோருக்கும் தெரியும்.*

**முதலாவது** *எவ்வளவு நிச்சயமாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டதோ, அதே விதமாக* **இரண்டாவதும்** *அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது.*

*ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் ஆழ்ந்து சிந்தித்தால், (வேதம் கூறுவது போன்று இதிலே ஞானம் விளங்கும் - வெளி. 13:8)* **மூன்றாவதும்** *கூட சரிவர அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு விட்டது. அது எங்குள்ளதென்று நாமறி*

*வோம். எனவே மூன்றாம் இழுப்பு இங்குள்ளது.*

*12. அது மிகவும் புனிதமானதால், அவர் துவக்கத்தில் என்னிடம் கூறினது போன்று, அதைக் குறித்து நான் அதிகம் கூறக்கூடாது.*

**அவர், "இதைக் குறித்து ஒன்றுமே கூறாதே" என்று என்னிடம் கூறினார். உங்களுக்கு அது ஞாபகமுள்ளதா, அநேக ஆண்டுகளுக்கு முன்பு? அது தனக்காகவே பேசிக் கொள்கிறது.**

*ஆனால் நீங்கள்... நான் மற்ற இரண்டையும் விளக்கிக் கூற முயன்றேன், நான் தவறு செய்து விட்டேன்.* **என் அபிப்பிராயப்படி இதுதான் (கர்த்தர் என்னிடம் இதை கூறுகிறார் என்று நான் சொல்லவில்லை); இது தான்**

**செல்ல வேண்டியதற்காக "எடுக்கப்படுதலுக்கேற்ற விசுவாசத்தை" துவக்கும்.** நான் சிறிது காலம் அமைதியாயிருக்க வேண்டும்.

இப்பொழுது கவனியுங்கள் (இந்த ஒலிநாடாவைக் கேட்கிறவர்களே), உடனடியாக என் ஊழியத்தில் மாறுதல் ஏற்பட்டு, அது பின்னடைவதை நீங்கள் காணலாம் - முன்னேற்றமல்ல, பின்னடைதல்.

அந்த காலத்தில் இப்பொழுது நாம் இருக்கிறோம், அது இனியும் முன்னேற முடியாது.

எடுத்துக்கொள்ளப்படுவதற்காக இது நிகழும் வரை, நாம் ஒரு நிமிடம் காத்திருக்க வேண்டும். அப்பொழுது அந்த நேரம் வரும். ஆனால் அது

முற்றிலுமாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு விட்டது.

ஒரு நேரம் வரப்போகின்றது ... அப்பொழுது இந்த தேசம், மிருகம் முன்பு வகித்திருந்த எல்லா அதிகாரத் தையும் (அதாவது அஞ்ஞான ரோமாபுரி போப்பாண்டவரின் ரோமாபுரியான போது) இது செலுத்தப் போகின்றது. இந்த தேசம் அதை செய்யும். வெளிப் படுத்தல் 13 அதை வெளிப்படையாக விளக்குகின்றது. ஆட்டுக்குட்டி பூமியி லிருந்து எழும்பி மேலே வந்தது, மற்ற மிருகம் தண்ணீரிலிருந்து எழும்பி மேலே வந்தது. தண்ணீர் திரளான ஜனங்களைக் குறிக்கின்றது. இந்த ஆட்டுக்குட்டியோ ஜனங்கள் இல்லாத இடத்திலிருந்து மேலே வந்தது.

*13.* ஆட்டுக்குட்டி என்பது ஒரு மதத்தைக் குறிக்கிறது - தேவாட்டுக் குட்டி. அது ஆட்டுக்குட்டியைப் போல் பேசினது என்று ஞாபகம் கொள்ளுங் கள். அது ஆட்டுக்குட்டியாயிருந்தது, ஆனால் அது வல்லமையைப் பெற்றுக் கொண்ட பிறகு வலுசர்ப்பத்தைப் போல் பேசி, அதற்கு முன்பிருந்த வலுசர்ப்பத் தின் அதிகாரம் அனைத்தையும் செலுத் தினது. வலுசர்ப்பம் எப்பொழுதுமே ரோமாபுரிக்கு அடையாளம். எனவே உங்களால் காண முடியவில்லையா: ரோம ஸ்தாபனம், முத்தரிக்கப்பட்ட பிராடெஸ்டெண்டு ஸ்தாபனம், மிருகத் துக்கு சொரூபம்.

எல்லா பிராடெஸ்டெண்டுகளையும் ஒரு ஐக்கியத்தில் சேரும்படி வலுக்கட்

டாயப்படுத்த அது வல்லமையைப் பெற்றிருக்கும்.

**நீங்கள் சபைகளின் ஆலோசனை சங்கத்திற்குள் இருக்க வேண்டும், இல்லையேல் உங்களால் ஐக்கியங் கொள்ளவோ, அல்லது... இப்பொழுது ஏறக்குறைய அவ்விதமாகவே உள்ளது. நீங்கள் ஐக்கியச் சீட்டையோ அடை யாளச் சீட்டையோ பெறாமல் ஒரு சபையில் சென்று பிரசங்கம் செய்ய முடியாது.**

இப்பொழுது முதல் என்னைப் போன்றவர்கள் முழுவதுமாக தள்ளப்படு வார்கள். அது முற்றிலும் உண்மை. ஏனெனில் அவர்களால் அதை செய்ய முடியாது.

அது இறுக்கமடைந்து வருகிறது. பிறகு அந்த நேரம் வரும்போது, இறுக்கமானது உங்களை இறுக்கி வெளியே தள்ளும் நிலையையடையும் போது, அப்பொழுது கவனியுங்கள் (இன்னும் சில நிமிடங்களில் உங்களிடம் கூற எத்தனித்துள்ளதை) அப்பொழுது மூன்றாம் இழுப்பை கவனியுங்கள். அது முற்றிலும், முழுவதுமாக இழக்கப்பட்ட வர்களுக்காக இருக்கும், ஆனால் அது மணவாட்டிக்கும் சபைக்கும் இருக்கும்.

*14.* நாம் நினைத்ததைக் காட்டிலும் அருகாமையில் இருக்கிறோம்.

அது எப்பொழுது என்று எனக்குத் தெரியாது.

ஆனால் அது மிக, மிக அருகாமை யில் உள்ளது.

**வேறொருவர் ஏறுவதற்காக நான் ஒருக்கால் மேடையைக் கட்டிக் கொண்டிருக்கலாம். அந்த நேரத்துக்கு முன்பு நான் எடுக்கப்படலாம். எனக்குத் தெரியாது.**

*பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து இயேசுவைக் கொண்டுவரும் அந்த நேரம் அடுத்த வாரமாயிருக்கலாம். அவர் அடுத்த வாரம் வரக்கூடும். இன்றிரவும் அவர் வரக்கூடும். அவர் எப்பொழுது வருவாரென்று எனக்குத் தெரியாது. அவர் அதை நம்மிடம் கூறுவதில்லை.*

*ஆனால் நாம் மிக அருகாமையில் இருக்கிறோம் என்றும், நான் முதிய வயதின் காரணமாக மரிக்க மாட்டேன் என்றும் நம்புகிறேன்.*

எனக்கு ஐம்பத்து நான்கு வயதாகியும் கூட, நான் முதிய வயதில் மரிக்க மாட்டேன், அதற்குள் அவர் இங்கிருப் பார், நான் சுடப்பட்டு, கொல்லப்பட்டு, அல்லது வேறெந்த வழியில் கொல்லப் பட்டாலொழிய - முதிய வயது என்னைக் கொல்லாது. அதற்குள் அவர் வந்து விடுவார். அதை நான் நம்பு கிறேன்...

இதை நான் கூற விரும்புகிறேன், இதை முன்பு நான் கூறினதில்லை, ஆனால் வேதவாக்கியங்களின்படி, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் அங்குள்ள நதியண்டை என்னிடம் கூறினவிதமாக (1933-ம் ஆண்டில்) எல்லாமே அப்படியே நிறைவேறி விட்டது.

**ஒருக்கால் நான் அதை செய்ய மாட்டேன், ஆனால் இந்த செய்தியானது இயேசுவை உலகிற்கு அறிமுகப்படுத்தும்.**

**“யோவான் ஸ்நானன் அவருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாய் அனுப்பப்பட்டது போல இந்த செய்தியும் அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாய் இருக்கும்”** *யோவான், “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” என்றான் (யோவான் 1:29). எனவே எல்லா வகையிலும் அது இணையாக உள்ளது, அது அப்படியிருக்குமென்று எனக்குத் தெரியும்.* **செய்தியானது போய்க் கொண்டிருக்கும்.**



முன்குறிக்கப்பட்ட தேவனுடைய வித்தானது அதைக் கேட்கும் வரைக்கும், விதைகள் செய்தித்தாள்களிலும், வாசிக்கப்படும் புத்தகங்களிலும் புறப்பட்டு ஓடும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: கேள்விகளும் பதில்களும், மே 27, 1962

179. ஆகவே ஏதோ ஒன்றிற்காக நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன்.

அது தாழ்மையில் அமைதியாக நம்மண்டை வந்து கவனத்தைக் கோராமல் சென்று அதை நாம் காணாமல் தவற விட்டு விட்டோமா?

அது கடந்து சென்று சபையானது தன் னுடைய பாவங்களில் அப்படியே விடப்பட்டு விட்டதா?

அப்படியானால், நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாகிவிட்டது.

**அப்படி இல்லையென்றால், சரியாக வேதாகமத்தின் பேரில் இருக்கின்ற ஒரு செய்தியுடன் ஒருவர் வருகின்றார், அந்த அதிசீக்கிர கிரியை பூமியை சுற்றி வரும்.**

**முன்குறிக்கப்பட்ட தேவனுடைய வித்தா னது அதைக் கேட்கும் வரைக்கும், விதைகள் செய்தித்தாள்களிலும், வாசிக்கப்படும் புத்த கங்களிலும் புறப்பட்டு ஓடும்.**

பிதாவானவர் இழுத்துக் கொள்ளாவிட் டால் யாருமே வரமாட்டார்கள், பிதாவானவர் இழுத்திருக்கின்ற ஒவ்வொருவர் அதைக் கேட்டு வருவார்கள். அவ்விதமாகத்தான் இருக்கும், முன்குறிக்கப்பட்ட வித்து வார்த் தையைக் கேட்கும்.

180. **அது சம்பவிக்கையில், அது ஒரு ஒன்று கூட்டப்படுதலாக இருக்கும்.**

**அப்பொழுது இயேசு தோன்றுவார், அப்பொழுது உலகம் முழுவதும் இருக்கின்ற சபை, உயிர்த்தெழுதலுடன் அங்கே மேலே செல்லும்.**



---

# செய்தி: கேள்விகளும் பதில்களும், மே 27, 1962

---

*171. இப்பொழுது மல்கியா 3-ஐ கவனியுங்கள்:*

**இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான். *(மல்கியா 3, மல்கியா 4 அல்ல)***

*172. இப்பொழுது மல்கியா 4 ஐ கவனியுங்கள்:*

**இதோ, சூளையைப் போல எரிகிற நாள் வரும்: அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரம் செய்கிற**

யாவரும் துரும்புகளாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் *(பாருங்கள், அது வரவிருக்கின்ற உபத்திரவம் மற்றும் அழிவைக் குறித்ததாகும்)*

ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும் *(கர்த்தருடைய வருகை)* நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய்... நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய் கொழுத்த கன்றுகளைப் போல வளரு

**வீர்கள். (அது ஒரு புல்வெளியின் மேல் நடந்து செல்வது என்பதாகும்)**

**துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம் பலாயிருப்பார்கள் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகிறார்.**

*173. இவ்வாறாக கூறுவோமா னால், நீதிமான்கள் கிறிஸ்துவோடு பூமிக்கு திரும்ப வருகையில், அந்த சாம்பல்களின் மேல் நடப்பார்கள். நீங்கள் இந்த மக்கள், இறுமாப்பு கொண்டவர்களாவும், வீம்புமிக்க திமிர் கொண்டவர்களாகவும், இழி வாக கருதுபவர்களாகவும், வட்ட மிட்டு ஒட்டுப்பார்த்து திருட்டுத்*

*தனமாக வேவு பார்ப்பவர்களுமாக வும் இருந்துகொண்டு அதே நேரத் தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்று உரிமை கோரும் இவர்கள், இவர்கள் சாம்பல்கள் தவிர வேறொன்றும் கிடையாது. அவ்வளவுதான். அதைத் தான் வேதாகமமும் கூறுகிறது. பாருங் கள்? இப்பொழுது கவனியுங்கள்.*

**ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக் காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள். இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வரு கிறதற்கு முன்னே நான் உங்களிடத் திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப் புகிறேன். அந்த நாளுக்கு (கர்த்தரின்**

***திரும்பி வருதல்) சற்று முன்னே, முதலாவதாக எலியா வருவான்.***

*174. சரி, நினைவில் கொள்ளுங்கள், பின்னர். அது யோவானின் வருதலாக இருந்திருக்க முடியாது. யோவான் அந்த எலியாவாக இருந்தான், ஆனால் அவன் ஐந்து முறை வருகிறான். இயேசு (J-e-s-u-s) விசுவாசம் (f-a-i-t-h), கிருபை (g-r-a-c-e). பாருங்கள், ஐந்து என்பது 'கிருபையின்' எண்ணாகும். எலியா ஐந்து தோன்றுதல்களைச் செய்கின்றான்: ஒரு முறை எலியாவாகவும், எலிசாவாகவும், யோவானாகவும், புறஜாதிகளின் முடிவிலும், பிறகு யூதர்களுக்கு மோசேயோடும் தோன்றுகிறான். பரிபூரண எண், பரிபூரண*

*தீர்க்கதரிசி, பரிபூரண செய்தியாளன், கண்டிப்பானவன், தைரியமானவன். புரிகின்றதா? கவனியுங்கள்.*

**கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள், அந்த நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதிரிசியை அனுப்புகிறேன்:**

**நான் வந்து பூமியை சங்காரத்தால் அடிக்காதபடிக்கு அவன் பிதாக்களுடைய இருதயங்களை பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளுடைய இருதயங்களை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.**

*175. பாருங்கள், அறிமுகப்படுத்தலின் முதல் வருகை அல்ல; அது யோவான் ஆகும், ஏனெனில் பூமி*

அப்பொழுது ஒரு துரும்பைப் போல் எரிக்கப்படவில்லை, நீதிமான்கள் அக்கிரமக்காரரரின் சாம்பலின் மேல் நடக்கவில்லை. ஆனால் இது நடந் தேறும் முன்னர் எலிசா வருவான். அவன் என்ன செய்வான்? பிள்ளை களின் விசுவாசத்தை பிதாவினிடத் திற்கு, வேதாகமத்தின் மூல விசுவா சத்திற்குத் திருப்புவான்.

***176.*** ஒரு மனிதன் வருவதை நான் காணும் போது, "அது அவனாகத் தான் இருக்கும். அங்கே ஒரு மனிதன் பேர் பெற்று வளருகிறான், அவனைப் பார், சபைகளும் போகின் றன" என்று நான் நினைப்பேன். ஆனால் அவன் செய்வதென்ன? வேதாகமத்திலிருந்து ஆயிரம் மைல்

கள் அப்புறமாகச் செல்கிறான். அவன் என்ன செய்கிறான்? சுற்றித் திரிகிறான், பிறகு காற்று வெளியேறி விடுகிறது. அவன் கீழே இறங்கி விடுகிறான். பவுல், "தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலித்தல், விசுவாசத்தை மறுதலித்தல்" என்று கூறுகிறான். வேதாகமத்தில் விசுவாசம் கொண்டிராமல், ஸ்தாபனங்களை, கோட்பாடு களை பிடித்துக் கொண்டு, அதைக் கூறிக்கொண்டு, ஸ்தாபன பிள்ளை களைப் பெற்றுக் கொள்ளுதல். அது விழத்தான் வேண்டும். அதோ அவன் பின்பாகச் சென்றுவிடுகிறான்.

***177.*** **கடைசிக்கால சபைக்கென அந்த விதையை விதைக்கப் போகின்ற அந்த ஒருவன் எங்கே? அந்த முதிர்ந்த விதை, வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட எலியா எங்கே? அவனுடைய நாட்களுக்குப் பிறகு உடனே அந்த மகா பெரிய உபத் திரவம் வந்து பூமியைச் சுட்டெரித்துப் போடும்.**

*178. பிறகு சபை மற்றும் அந்த மணவாட்டியின் திரும்ப வருதலில், அக்கினியால் சுத்தமாக்கப்படுகின்ற போது, ஆயிர வருட அரசாட்சியில், மணவாட்டியும் கிறிஸ்துவும் அவர்க ளுடைய சாம்பலின் மீது நடப்பார் கள். அங்கே அவர்கள் அரசாட்சி*

செய்வார்கள். சுவிசேஷத்தை கேட்டி ராத அஞ்ஞானிகள் அந்த சமயத்தில் எழுப்பப்படுவார்கள், தேவனுடைய குமாரரர் வெளிப்படுத்தப்படுவர். அவன் அரசாட்சி செய்ய வேண்டு மெனில், அரசாட்சி செய்யப்படுவதற் கென ஒன்றை அவன் கொண்டிருக்க வேண்டும், அவனுக்கு ஒரு ஆட்சி எல்லை இருக்கின்றது. "அவர்கள் கிறிஸ்துவோடு அரசாட்சி செய்து ஆளுகை செய்தனர்". கிறிஸ்து தேசங் களை இருப்பு கோலால் ஆளுகை செய்தார். அப்பொழுது சுவிசேஷம். அப்பொழுது வெளிப்படுத்தப்பட்ட தேவ குமாரரர், அவர் பூமியில் இருந்தபோது எந்த விதமான அதிகா ரத்தை உடையவராக இருந்தாரோ

*அதே அதிகாரத்தை உடையவர்களாக, அந்த அரசாட்சியில், ஆயிர வருட அரசாட்சியில் வருவார்கள், பாருங்கள், சாம்பலின் மீது நடப்பார்கள்.*

***179.*** **ஆகவே ஏதோ ஒன்றிற்காக நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன்.**

**அது தாழ்மையில் அமைதியாக நம்மண்டை வந்து கவனத்தைக் கோராமல் சென்று அதை நாம் காணாமல் தவற விட்டு விட்டோமா?**

**அது கடந்து சென்று சபையானது தன்னுடைய பாவங்களில் அப்படியே விடப்பட்டு விட்டதா?**

அப்படியானால், நீங்கள் நினைப் பதைக் காட்டிலும் காலதாமதமாகி விட்டது.

அப்படி இல்லையென்றால், சரியாக வேதாகமத்தின் பேரில் இருக்கின்ற ஒரு செய்தியுடன் ஒருவர் வருகின் றார், அந்த அதிசீக்கிர கிரியை பூமியை சுற்றி வரும்.

முன்குறிக்கப்பட்ட தேவனுடைய வித்தானது அதைக் கேட்கும் வரைக்கும், விதைகள் செய்தித்தாள் களிலும், வாசிக்கப்படும் புத்தகங் களிலும் புறப்பட்டு ஓடும்.

பிதாவானவர் இழுத்துக் கொள் ளாவிட்டால் யாருமே வரமாட்டார்கள்,

**பிதாவானவர் இழுத்திருக்கின்ற ஒவ்வொருவர் அதைக் கேட்டு வருவார்கள். அவ்விதமாகத்தான் இருக்கும், முன்குறிக்கப்பட்ட வித்து வார்த்தையைக் கேட்கும்.**

*180.* **அது சம்பவிக்கையில், அது ஒரு ஒன்று கூட்டப்படுதலாக இருக்கும்.**

**அப்பொழுது இயேசு தோன்றுவார், அப்பொழுது உலகம் முழுவதும் இருக்கின்ற சபை, உயிர்த்தெழுதலுடன் அங்கே மேலே செல்லும்.**

*181. யோவான் வந்த விதமாக அது இருக்குமா, தெரிந்து கொள்ளப் பட்ட சீஷர்கள் கூட அதை அறியா*

மல் இருந்தனரே? அவர்கள் "அப்படி யானால் எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார் களே, அதெப்படி?" என்று கூறினர்.

*182.* அதற்கு அவர், "அவன் ஏற்கெனவே வந்தாயிற்று. உங்களுக்கு அது தெரியவில்லை'' என்றார். மேலும் அவர், "அவனை என்ன செய்வார்கள் என்று கூறினார்களோ அதை தங்கள் இஷ்டப்படி அவனுக் குச் செய்தார்கள்" என்று கூறினார். அவனுடைய செய்தியானது மிக வேகமாக இருந்தது, எல்லா இஸ்ர வேலருக்கும் சென்றது, அது ஒரு சிறிய இடத்தில்... இரண்டு சிறிய இடத்தில், எருசலேமுக்கு சற்று தள்ளி அங்கே அது...?... யோவான் ஞானஸ்நானம் கொடுக்கச் சென்ற

இடம், அவன் நதியில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த இடத்தில். நதியின் தண்ணீர் குறைந்து வறண்டதாயிருந்தது. அந்த இடத்தில், ஆறே மாதத்தில் மேசியாவின் முழு அறிமுகமானது வந்து சேர்ந்தது. பாருங்கள்?

*183.* நாம் ஏதோ ஒன்றை கண்டும் காணாமல் விட்டுவிட்டோமா? நாம் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாகி விட்டதா? இது இப்பொழுது இருதயத்தோடு - இருதயம் மனம் விட்டு பேசும் ஒன்றாகும். இன்றிரவு இது, இது... ஆமாம், இது இங்கே சாதாரண ஒரு பேச்சாகும். நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாகி விட்டதா? அங்கே அந்த நாளில் நதியண்டை வந்த அந்த

செய்தி சரியாக அதுவாகத்தான் இருக்குமா? அது யாருக்கும் தெரி யாமல் கடந்து மக்கள் அதைக் காணத் தவற விட்டு விட்டனரா? அது அதுதானா? அப்படியானால் நாம் நினைப்பதைக்காட்டிலும் கால தாமதமாகிவிட்டதா? அது எப்பொ ழுது இருக்கும்? எனக்குத் தெரியாது. ஒருக்கால் இன்றிரவாக இருக்கலாம். இன்னும் ஐம்பது வருடங்கள் இருக்க லாம். அது எப்பொழுது என்று எனக்குத் தெரியாது, இப்பொழுது நான் இருப்பது போல தொடர்ந்து நான் சென்று கொண்டே இருப் பேன். சரி, அது என்ன? ஏதோ ஒன்றை நான் எதிர்நோக்கிப் பார்த் துக் கொண்டிருக்கிறேனா?





Little old India is laid down there, all these years, and now she’s a keynote; illiterate people, but a keynote
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 56-0902 — The Handwriting On The Wall

107 Brother, when I see the ensign lifted yonder in Jerusalem, when I see the Jews returning back, when I see that middle Eastern problem.

Little old India is laid down there, all these years, and now she's a keynote; illiterate people, but a keynote.

We failed to preach the Gospel to them.

We've done everything else. We even built great big churches, and

spent billions of dollars, to put in a church. And missionaries can't go, because they haven't got the finance to go on. And we've went over there, and what missionaries went over there, and try to tell them about the Lord, here come the others over, following them, in great big fine finery, and even making fun and shunning them. I stood and watched it with my own eyes. Brother, we've been weighed in the balance, and found wanting.

*56-0902 — The Handwriting On The Wall*

Rev. William Marrion Branham



google.com/amp/s/dict

dictionary.cambridge.org

Cambridge Dictionary

*Meaning of **keynote** in English*

# keynote

***noun*** [ C ]

**UK** /ˈkiː.nəʊt/ **US** /ˈkiː.noʊt/

**the most important or most emphasized part of something:**

- *This issue has become the keynote of the election campaign.*
- *a keynote address/speech/speaker (= an important talk/speaker at a formal meeting)*



google.com/amp/s/dict

Cambridge Dictionary

**keynote** | AMERICAN DICTIONARY

# keynote

***noun*** [ C ]

**US** /ˈki·ˌnoʊt/

**the most important part, esp. of an event, or something that is emphasized strongly:**

- *a keynote speaker/speech*
- *Luxury is the keynote here.*

இப்பொழுது,
தேவன் ஒரு
காரியத்தை
செய்வதாக
கூறும்போது,
அவர் அதைச்
செய்தே தீருவார்.

Title: அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?

# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

# 4



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து